# அந்த நாளிலே!

"இனிது! இனிது!" என்று ஒளவையாரால் போற்றப்படும் ஏகாந்தம், எனக்கும் எப்போதும் இனிதாகவே இருப்பது வழக்கம். இந்த நாளிலே, தனிமையை நன்மையும் இன்பமும் பயக்கும் வகையில் பயன்படுத்திக் கொள்ளச் சாதனங்களுக்கு என்ன குறைச்சல்? ஆனால் இன்று எனது ஏகாந்தத்தை இனிப்பாக்கியது படிப்புமல்ல, பாட்டுமல்ல, தையல் வேலையுமல்ல; இன்பமயமான சில பழைய சம்பவங்களின் நினைப்புத்தான்.

எங்கள் பக்கத்து வீட்டிற்குக் குடிவந்திருப்பவர்கள் ஒரு இளம் தம்பதிகள் என்று அறிந்த என் உள்ளம், "ஐயோ, பாவம்! எத்தனை நாள் வீடு கிடைக்காமல் பிரிந்திருந்தவர்களோ! இனிமேலாவது சந்தோஷமாயிருக்கட்டும்!" என்று அவர்களை வாழ்த்தியது. போன வருடம், இந்த நாட்களில், வீடு நெருக்கடிக் கஷ்டத்தினால் நான் வேதனைப்பட்டதும், அதையடுத்து நடந்த சில வேடிக்கையான சம்பவங்களும், என் நினைவுக்கு வந்தன.

முன்னிருளைத் தொடர்ந்து வரும் நிலவொளியையும், நட்சத்திரங்களின் ஜ்வலிப்பையும் காணும்போது ஏற்படும் உவகையில், இருளின் பயங்கரம் மனதைவிட்டு மாயமாய் மறைந்து போகிறதன்றோ? அதுபோலவே, வேதனையை யொட்டியே சில களிப்பூட்டும் சம்பவங்கள் அந்நாள் நடப்பினும், இப்போது என் உள்ளங்களுக்கிடையிலே, அந்தச் சந்தோஷமளித்த அனுபவங்கள் மட்டுமே துள்ளி விளையாடுகின்றன.

கண் வளர்ந்திருக்கும் மகவு தனக்குத் தானே சிரித்துக் கொள்வதுபோல, நானும், அந்த நாட்களை நினைத்துவிட்டால், எனக்குள் சிரித்துக் கொள்கிறேன்.

என் கணவருக்கு அப்போது இந்தச் சென்னைப் பட்டணத்திலே புதிதாக உத்தியோகமாயிருந்தது, அவர் மட்டும் இங்கே ஒரு ஜாகையில் இருந்துவந்தார்; நான் பிறந்தகத்தில் இருந்தேன். எங்களை ஒன்று சேர்க்கும் குடித்தனம் அமர்த்தப்படுவதற்குத் தடையாக நின்றது 'வீட்டுக்கஷ்டம்'.

இரண்டு வருஷங்களாக அவர் ஏதேதோ பரீசைகளுக்குப் படித்துக் கொண்டு இருந்து, வேலையில் அமராததால், புக்ககத்திலும் பிறந்தகத்திலுமாக மாறிமாறி இருந்துவந்த எனக்கு, குடித்தனம் வைக்க அடங்காத ஆவல். 'வீட்டுக் கஷ்டம்' என்று புதிதாக ஒரு கஷ்டம் உலகத்திலே இருப்பதையே மறந்து, இன்பக் கோட்டைகளைக்கட்டி வந்த எனக்கு, 'வீடு கிடைப்பதில்லை' என்று செய்தி கொணர்ந்த என் கணவரின் கடிதம் சொல்லொணாத வேதனை தந்தது. 'இடி விழுந்ததுபோல' என்று கூறுவார்களே, அது போல பேரதிர்ச்சி ஏற்பட்டிருந்தது. சீட்டுக் கட்டைக் கொண்டு வீடு கட்டிவிட்டு, அது குலைந்ததைக் கண்டு வருந்தும் குழந்தையைப் போல நானும் வருந்தினேன்.

மனக்கோட்டைகள் துகள் துகளாகி, ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் உணர்ந்த நான் கடைசியில் அதிர்ச்சியையகற்றி, அமைதி நிலைநாட்டிக் கொள்ள, 'இடி விழுந்ததற்கு'ப் பழியை என் மேலேயே சாற்றிக்கொண்டேன். என் புத்தியின்மையையே நொந்துகொண்டு, ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் தவித்தேன். 'வீடு கிடைப்பது இந்த நாளில் கஷ்டம் என்பதை ஏன் என் முட்டாள் புத்தி நினைக்கவில்லை?' என்று என்னையே திட்டிக்கொண்டேன்.

எப்படியோ என் மனக் கொந்தளிப்பு அடங்கியது. ஆனால் அது எத்தனை நாட்களுக்கு? ஒரு பத்துநாட்காளுக்குத்தான்!

என் ஒன்றுவிட்ட அத்தையின் வருகை, தட்டிவிட்டுவிட்டது அடங்கியிருந்த மனதை; என் மனத்தின் அடியில் படுத்துக்கிடந்த உணர்ச்சிகள் சீறி எழுந்தன.

சென்னைக்குப் போகும் வழியில் சௌகரியத்தை யுத்தேசித்து எத்தனையோபேர் என் பிறந்தகத்தில் தங்கிச் செல்வதுபோல் இந்த அத்தையும், வந்தாள்.

'யார் யாரோ சென்னைக்குப் போகிறார்கள். நாம் எப்பொது போகப் போகிறோமோ?' என்ற ஏக்கம் நிறைந்த கேள்வி என் அந்தரங்கத்தில் பிறந்தது முதலில்.

'இன்றிரவு அத்தையுடன் புறப்பட்டால், நாளை விடியற்காலத்திற்குள் 'அவரை'ப் பார்க்கமுடியும்! .... ஆனால் . . . ' என்று எழுந்தது அடுத்த வினா.

'ஆனால் என்ன? குடித்தனம் வைத்தால்தான் சென்னை போகணுமா? உன் சித்தியிருக்கிறாளே, அங்கே போய் இரேன்! அவரைப் பார்க்க முடியுமே!' என்று குறிப்புக் கொடுத்தது என் இதயரங்கம்.

'ஆம்! ஆம்! சித்தியிருக்கிறாள்! என்னைப் பார்த்து மூன்று வருஷமாச்சு என்றும், பார்க்க ஆவல் மிகுந்திருக்கிறதென்றும் சமீபத்தில் எழுதியிருந்தாள்! அங்கே போகலாமா? . . . அவரைப் பார்க்கமுடியும், சித்தியகத்தில்! நிஜந்தான்! முன்னர் எப்.ஸி.எஸ், பரீசைக்கு அவர் அங்கே படித்து வந்த நாட்களில், எப்போதாவது சித்தப்பாவை - தன் சின்ன மாமனாரைச் - சிரத்தையுடன் போய்ப் பார்த்துவிட்டு வருவாராம்! இப்போது உத்தியொகத்தில் அமர்ந்ததும் கட்டாயம், போய் வந்துகொண்டிருப்பார்! அடிக்கடி போய் வருவார்! ஆம், சித்தியகத்திற்கு வரும்போது அவரைப் பார்க்கலாமே!''..... என்றது ஆசை.

'ஆம்! அவரைப் பார்க்கலாம் சித்தியகத்திலிருந்துகொண்டிருந்தால். இங்கே இருந்தால் என்ன, சித்தி வீட்டிற்குப் போய் இருந்தால் என்ன! இரண்டும் பிறந்தகம். யாரும் குற்றம் கூற வகை ஏது! இன்று அத்தையுடன் போனால், என் ஆசையும் நிறைவேறும்; சித்தியின் விருப்பமும் நிறைவேறும்! ஆம், இதுதான் சரி! இன்று அத்தையுடன் சென்னை போக முயற்சி செய்யவேண்டும்!'

'முயற்சி என்ன! நிச்சயம் போக வேண்டும்! . . .ஆம். போகப் போகிறேன் சென்னைக்கு நானும்!'

இப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என் மனம், சில வினாடிக்குள். மனதில் சலனம் ஏற்பட்டதனால் உண்டான கிளர்ச்சியினால், மனப்புற்றிலிருந்து மளமளவென்று ஊறின உணர்ச்சிகள், கிளம்பின யோசனைகள் - சாரி சாரியாகச் செல்லும் எறும்புகள் கூட்டம் போல! செல்லெறும்புச் கூட்டம்தான்!

என் யோசனைகள் இந்த முடிவுக்கு வந்ததும், ஒரு சந்தேகமும் தோன்றியது: அப்பா அம்மா ஒப்புவார்களா? அத்தை என் யோசனையில் அதிருப்தி காட்டாமல், 'மீனமேஷம்' பாக்காமல், கூட்டிக்கொண்டு போவாளா?

உடனே ஏதோ ஒரு இன்றியமையாத தடையத்தைக் கண்டுபிடித்துவிட்ட துப்பறிபவரைப்போல், ஒரு துள்ளுத் துள்ளியது என் உள்ளம். அப்பா அம்மாவைச் சம்மதிக்கச் செய்ய ஒரு காரணம் கண்டுக்கொண்டேன். பெற்றோர் சம்மதித்துவிட்டால், அத்தை கூட்டிக்கொண்டு போக ஏன் சம்மதிக்கமாட்டாள்? பார்க்கலாம்!

அம்மாவிடம் முதலில் போனேன்: "அம்மா! அத்தையை நாளைக்குப் புறப்படச் சொல்; நானும் அத்தையுடன் சென்னை போய், சித்தியகத்தில் கொஞ்சநாள் இருக்கிறேன்."

"இதென்ன திடுதிப்பென்று இந்த யோனை?" என்று கேட்டாள் அம்மா, "மாப்பிளைக்குச் சரியான பெண்ணாக இருக்கணுமென்றுதான், இந்த திடுதிப்பு எண்ணம்!" என்றேன் சிரித்துக்கொண்டே.

அம்மாவுக்குத் என் யோசனை ஒருவாறு புரிந்துதான் இருந்தது, "சரி போய்ட்டு வா! ஆனால் அப்பாவையும் கேள் ஒரு வார்த்தை" என்றாள்.

அம்மாவே சம்மதம் என்றபின், அப்பா செய்யும் தடை ஏதும் இராது என்று தெரியும் எனக்கு. 'அப்பா பெண்' நான். அதுவுமல்லாமல், என் யோனைகள் தவறாயிரா என்பது அப்பாவுக்கு நம்பிக்கை.

நான் அப்பாவைக் கேட்டேன்; "சரி போ! ஸ்டேஷனுக்கு யாரை வரச் சொல்லி எழுதட்டும்? சித்தப்பாவையா? அல்லது மாப்பிள்ளையையா?" என்று கேட்டார்.

"ஐயையோ, மாப்பிள்ளைக்கு எழுதவேண்டாமப்பா! சித்தப்பாவையே வரச்சொல்லுங்கள்! மாப்பிள்ளைக்குத் தெரியாமல், சித்தப்பாவகத்திற்குப் போகணும், அங்கே எப்போதாவது வந்தால் மாப்பிள்ளை திடுக்கிடணும் என்று தானே நான் இந்த யோசனை செய்திருக்கிறேன்!" என்றேன்.

அப்பா என் மனதை நன்றாகத் தெரிந்து கொண்டுவிட்டார். "ஓகோ!" என்றார் சிரித்துக்கொண்டே! "சரிதான்! பதிலுக்கு பதிலா! உம், ஆகட்டும்! நான் எழுதவில்லை மாப்பிள்ளைக்கு! சித்தப்பாவை வரச் சொல்லுகிறேன் ஸ்டேஷனுக்கு!" என்று கூறிவிட்டார்.

சித்தியகத்திற்கு வந்து ஓரிரண்டு நாட்கள்வரை, சித்தியுடனும், சித்தி பிள்ளைகளுடனும் உல்லாசமாகப் பொழுது போக்கினேன். சென்ட்ரலிலிருந்து சிற்றப்பா என்னை அழைத்து வரும்போது, என் கணவர்பால் என் மனம் ஊசலாடியவண்ணமிருந்தது. 'கடிதம் போட்டிருந்தால், அவர் வந்திருப்பாரே, இத்தனை நாழி அவரோடு பேசிக்கொண்டிருந்திருக்கலாமே! . . . ' என்று தோன்றியது. ஆனால் உடனே, 'வேண்டாம் என்றுதானே தெரிவிக்கவில்லை! மறுபடியும் ஏன் இந்தச் சபலம்!' என்று சமாதானம் செய்துகொண்டேன். அருமையான யோசனையொன்றைச் செய்துவிட்டு அதற்கு வருந்துவது முட்டாள்தனம்! 'நம் யோசனைமட்டும் வெற்றியோடு நிறைவேறிவிட்டால்... ஆகா!...' என்று என் மனம் குஷியே அடைந்தது மீண்டும். அந்தக் குதூகலத்துடனே, சித்தியகத்தில் ஓடியாடிக் களித்துவந்தேன்.

பெண் குழந்தையில்லாக் குறையுள்ள சித்தி எப்போதும் என்னிடம் அடங்காத பிரியம் உடையவள். இப்போது மூன்று வருஷங்களுக்குப் பின் என்னைப் பார்த்த அவளுக்குச் சந்தோஷம் எத்தனையென்பதைக் கூறுவது சாத்தியமாகுமா? கொள்ளையோ கொள்ளை சந்தோஷம்!

நான் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம், அவளுடைய கேள்விக்குப் பதிலாக, என் கணவர் சென்னையில் சமீபத்தில்தான் வேலையாக அமர்ந்தைப் பற்றிக் கூறினேன்,

"அட, எனக்குத் தெரியாதே! . . .அவரும் வரவில்லை இங்கே! நீயும் எழுதவில்லை! . . . நீ வந்திருப்பது தெரிந்தாவது, இன்று வருவாரோல்லியோ?" என்றாள் சித்தி.

"நான் இங்கு வந்திருப்பது அவருக்குத் தெரியாது, சித்தி? நான் தெரிவிக்கவில்லை! தாமாக இங்கு வந்தால்தான் தெரியவேணும்!" என்றேன்.

"ஏன் கமலம்!... . நன்னா எழுதாமலிருந்தாய்! அவர் விலாசத்தைக் கொடு! நான் ராஜூவிடம் சொல்லியனுப்புகிறேன்!"

"வேண்டாம் சித்தி! சொல்லியனுப்பாதே!.... நான் ஒரு காரணமாகத்தான் தெரியப்படுத்தவில்லை....."

"என்ன, சண்டையோ!"

"இல்லையில்லை, சண்டையில்லை! ஆனால் போட்டி! என்ன போட்டி தெரியுமா? சிரிக்காமலிருந்தால் சொல்லுகிறேன்!" என்று துவக்கினேன், என் அந்தரங்க யோசனையைக் கூற. சித்தியிடம் எனக்கு அபாரசலுகை உண்டு.

"சொல்! சிரிப்பானேன்?" என்றாள் குறும்பாகச் சிரித்தவண்ணம், சித்தி.

"சித்தி! அவர் ஒரு தடவை ஒரு நாடகத்தனம் பண்ணப் பார்த்தார். 'சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று வந்து ஆத்துலே குதிக்கணும், எங்களை ஆச்சரியப்பட வைக்க,' என நினைத்தார், ஆனால் நான் மானஸீகமாய்க் கண்டு பிடித்துவிட்டேன். பதிலுக்கு அவரை நான் திடுக்கிட வைக்க எப்போதாவது சந்தர்ப்பம் கிடைக்காதா என்று அப்போதே எனக்கு ஆசை எழுந்திருந்தது. இப்போது தான் சமயம் கிடைத்திருக்கிறது. சமீபத்திலே அவர் ஒருநாள் இங்கே வருவார், கட்டாயம். அப்போது நான் அவர் முன்னே திடுதிப்பென்று தோன்றணும்; அவரிடம், "பார்த்தேளா நீங்கள் நினைத்ததை நிறைவேற்ற முடியாவிட்டாலும், நான் நினைத்ததைச் செய்துவிட்டேன்! நீங்கள் என் யோசனையைக்

கண்டுபிடிக்க முடிந்ததா?" என்று கேட்கணும்! இதுதான் ரொம்ப நாளாக என் ஆசை! ஆதனால்தான் எழுதவில்லை!" என்றேன்.

"ஓஹோ, சரிதான்!" என்றாள் சித்தி. சித்திக்கும் என் போல் குறும்புத்தனம் அதிகம், ஆதலால் தானும் என்னுடன் ஒத்துழைக்க முற்பட்டாள் போலும்! கேட்டாள் மேலும் . . .

"அவர் வந்தால் சாயங்காலமாகத்தான் வருவது வழக்கம்! . . உம், அதிருக்கட்டும்! அவர் எப்படி வேடிக்கை பண்ணினார், நீ எப்படிக் கண்டுபிடித்தாய், எல்லாம் சொல்லு! நாம் அதற்கு மேலே பெரிய நாடகத்தனம் பண்ணலாம்! நானும் யோனை பலமாகச் செய்கிறேன்!" என்றாள்.

நான் கூறலானேன்:

அவருக்குப் போன வருஷம் இங்கே ஏதோ 'இண்டர்வ்யூ'க்கு வரவேண்டியிருந்தது சித்தி! நான் அப்போது புக்ககத்தில் இருக்கவில்லை, அம்மாவிடம் தான் இருந்தேன். 'பங்களூரிலிருந்து மாப்பிள்ளை சென்னைக்குப் போகவேண்டியிருக்கும், அந்த மாதத்திற்குள்' என்ற விஷயம் மட்டும் தெரிந்திருந்ததே ஒழிய, 'எந்தக் தேதி புறப்படுவார், எப்போது இண்டர்வ்யூ', என்று ஒரு சமாசாரமும் 'அவர்' எழுதவில்லை."

'எப்படியும் அங்கே இறங்கிவிட்டுத்தான் போவார்; ஆனால் ஏன் அதைப்பற்றி எழுதவில்லை?' என்று எனக்குச் சந்தேகம் தோன்றிவிட்டது. மாதக்கடைசி வந்தும் ஒரு வார்த்தைகூட அவர் தெரிவிக்காமல் இருக்கவே என் சந்தேகம் பலப்பட்டு, யோசனைமேல் யோசனை தோன்றிவந்தது.

'அவர் திடீரென்று வரப்பார்க்கிறார்; ஆமாம்! அதனால்தான், 'குட்டா"க இருக்கிறார்,' என்ற நிச்சயம் ஏற்பட்டுவிட்டது எனக்கு.

'அப்படி வேடிக்கை செய்யக்கூடியவர் தான் அவர்!நாமும் ஏன் வேடிக்கையாக, 'குட்டா'க அவரை முந்திக்கொள்ளக் கூடாது?" என்று எனக்கு தோன்றியது!

அதென்ன மாயமோ, எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது சித்தி! ஒரு ஞாயிற்றுக்கிழமை. அன்று அம்மாவிடம் போய், 'அம்மா, மாப்பிள்ளை இந்தச் செவ்வாய்க்கிழமை ராத்திரி கட்டாயம் வருவார், பார்!.... ஆனால் கடுதாசி வராது, வேணுமானால் பார்! திடீரென்று வரத்தான் அவர் இவ்வளவு அமுக்காய் இருக்கிறார்!' என்றேன்.

அதற்கு அம்மா, 'போடி, போ! அப்படியெல்லாம் கடுதாசி போடாமல் வரமாட்டார்! ராவேளை, திடீரென்று பத்து மணிக்கு வந்தால், சமையல் சாப்பாட்டுக்குக் கஷ்டம் என்று தெரியாதா? அப்படித்தான் என்ன, பத்து வருஷம் ஆச்சா, மாப்பிள்ளை அவ்வளவு சகஜமாய்க் கடிதம் போடாமல் வர?' என்று கூறிவிட்டு, என் வார்த்தைகளைக் கொஞ்சமும் ஏற்கவில்லை. ஆனால் நான் மட்டும் செவ்வாய்க்கிழமை சாயங்காலம்கூடச் சொன்னேன். 'இன்று மெயிலில் வந்துக்கொண்டிருப்பார். நிச்சயம்!" என்றேன். பிறகு, 'அம்மா, உனக்கு நம்பிக்கையில்லாவிட்டால் சமைத்து வைக்க வேண்டாம்! சாதம் கொஞ்சமும், தயிரும் எடுத்துவை, போதும்! சொல்லாமல் வருகிற மாப்பிள்ளைக்கு அது போதாதா?" என்றேன்.

அப்போதுதான் அம்மா திடுக்கிட்டாள்... "இதென்னடி . . . போகிறது! இவ்வளவு நிச்சயமாய்ச் சொல்கிறாயே! உனக்கு மட்டும் எழுதியிருக்கிறாரா எதானும்!" என்றாள். அப்போதுதான் அவளுக்கு நம்பிக்கை தோன்றலாச்சு.

"சரியாப்போச்சு! அப்படித்தெரிந்தால், ஏன் மறைக்கிறேன்? அவர் ஒரு வார்த்தையும் எனக்கு எழுதவில்லை. என் மனசு தான் சொல்கிறது! அவர் சுபாவம் தெரியும் எனக்கு! ஆறு மாதம்தான் பழகியிருக்கிறேனென்றாலும், தமாஷ் பேர்வழியா, இல்லையா என்று கண்டுபிடிக்க முடியாதா?... அவர் கட்டாயம் வரத்தான் போகிறார் இன்றைக்கு! நீ அப்பாவை ஸ்டேஷனுக்குப் போகச் சொல்லேன் அம்மா? அவரை ரயில், ஸ்டேஷனுக்குக் கொண்டு வந்து விட்டுவிடும். ஆனால், வீட்டுக்குவரச் சிரமப்பட்டாலும்படுவார்! அதுவுமல்லாமல், அவருக்கு நாம் எதிர்பார்ப்பதும் தெரிந்துபோகும் வெட்ட வெளிச்சமாய்! . . . அப்பா ஸ்டேஷனுக்குப் போகமாட்டாளாம்மா?" என்று கேட்டேன்.

அம்மா என் நிச்சயத்தைப் பார்த்து ஆச்சர்யப்பட்டுக் கொண்டே, அப்பாவைப் போய்க் கேட்டாள். அப்பா, 'சரி' என்று புறப்பட்டார் ஸ்டேஷனுக்கு அன்றிரவு. சாதாரணமாக இருந்தால் அப்பா, 'கடிதம் வராதபோது வீணாக ஏன் என்னை அலைக்கழிக்கிறாள்?' என்று கோபித்திருப்பார். ஆனால் அன்றோ, 'கமலு இவ்வளவு சொல்லும்போது, போய்ப் பார்த்துவிட்டு வந்தால் போச்சு!' என்றுதான் புறப்பட்டுப் போனார். இரண்டு நாளாக நான் அவ்வளவு நிச்சயமாய்ச் சொல்லி வந்ததை அலஷியம் பண்ண முடியவில்லை.

கடைசியில் நான் சொன்னபடியே நடக்கவும் நடந்தது!

ஸ்டேஷனுக்குள் ரயில் வந்து, பெட்டிகள் எல்லாம் தம்மைத் தாண்டிக் கொண்டு போகும்போது, அப்பாவுக்குத் தம் கண்களையே நம்ப முடியவில்லையாம், சித்தி! ஒரு பெட்டிக்குள், 'அவர்' நின்றுகொண்டு, மேல் தட்டிலிருந்து பெட்டிகளை இறக்குவதிலே முனைந்திருந்ததை, ஓடுகிற ரயிலில் கண்டாராம் அப்பா! மாப்பிள்ளை. யாரையும் ரயிலடியிலே எதிர்பாராததால், தம் பாட்டுக்கு காரியத்திலே கவனமாயிருந்ததாராம். அப்பா அவர் முகத்தைப் பார்த்துவிட்டதும், 'அட, நிஜமாகவே மாப்பிள்ளை வந்திருக்கிறாரே! எப்படி அவ்வளவு நிச்சயமாய்க் கமலு சொன்னாளோ?' என்று ஆச்சர்யப்பட்டுக் கொண்டே, மாப்பிள்ளையை பார்த்த பெட்டி பக்கம் ஓடி, பெட்டி நின்றதும், அதற்குள் ஏறி, 'வாருங்கள் மாப்பிள்ளை!' என்றாராம். 'ஆ! யாரது!' என்று திடுக்கிட்டு 'அவர்' திரும்பிப் பார்த்தாராம். 'உங்களுக்கு எப்படித்தெரிந்தது?' என்று முதலில் கேட்டாராம். அப்படிக் கேட்கும்போது அவர் முகத்தைப் பார்க்கவே பரிதாபமாயிருந்ததாம் அப்பாவுக்கு.

'கமலு சொல்லிக்கொண்டேயிருந்தாள், இன்று நீங்கள் வருவீர்களென்று. நாங்கள் கடிதம் போடாமல் வரமாட்டார், என்று சொல்லி வந்தோம். ஆனால் அவள் நச்சுப் பொறுக்காமல் வந்தேன். ரயில் வந்து, உங்கள் முகத்தைப் பார்க்கும் வரை, அவள் சொன்னதும், நான் அவள் வார்த்தையைக் கேட்டு வந்ததும் பைத்தியக்காரத்தனமென்றே எண்ணினேன்! ஆனால் இப்போது தான் அறிந்தேன். அவள் தீர்க்கதரிசனத்தை! எப்படித்தான் அவள் அப்படிச் சொன்னாளோ? உம்! சரி, சரி, புறப்படுங்கள்! நாழியாகிறது! சமையல் எல்லாம் ஆறிவிடும்!' என்று அப்பா தட்டி எழுப்பினாராம், பிரமை பிடித்து நின்ற மாப்பிள்ளையை.

அப்புறம் அவர் வீட்டிற்கு வந்ததும் அம்மாவிற்கும் ஆச்சர்யம்! எனக்கோ 'நாம் சொன்னது உண்மையாயிற்றே!' என்ற சந்தோஷம்! அம்மா என்னைப் பார்த்துப் பார்த்து 'எப்படியடி தெரிந்தது?' எப்படியடி சொன்னாய்!' என்று அதிசயத்துடன் கேட்டவண்ணமிருந்தாள்.

சாப்பாடு நடந்துகொண்டிருக்கையில் நான், அவரைப் பார்த்து, 'நீங்கள் இன்று வருவதாக எழுதியிருந்தீர்களா? சொல்லுங்கள்! அம்மாவுக்குச் சந்தேகம், நீங்கள் எனக்கு மட்டும் தெரிவித்திருப்பீர்களோ என்று!' எனக் கேலியாகக் கேட்டேன்.

அப்போது மாப்பிள்ளையே அம்மாவிடம் சொல்லிக்கொண்டுவந்தார்: 'என் வாழ்நாளிலேயே முக்கியமான, அரிதான சந்தர்ப்பம் ஏற்பட்டது என்று நினைத்து பெரிய பிளானாகப் போட்டேன், மாமி! ஒன்றரை மாதமாக இதற்கு யோசனை பண்ணியிருந்தேன். கமலிக்கு எழுதவில்லை, எப்போது புறப்படணும், என்றைக்கு இங்கு வருகிறேன் என்று! இன்டர்வியூ, 29, 30 தேதிவாக்கிலே இருக்கும் என்று மட்டும் குறிப்பிட்டிருந்தேன்; ஆனால் 26 ஆம் தேதி, இன்று வருவேனென்று ஒரு குறிப்பும் நான் தரவே இல்லை.'

'இங்கு திடீரென்று வரணும், ஆச்சர்யப்பட வைக்கணும், ஆனால் என் திடும் பிரவேசத்தால் சிரமமிருக்கக் கூடாது,' என்று பத்து மணிக்கு வண்டியிறங்கினதும், ரிப்ரஷ்மெண்டு ரூமில் சாப்பிட்டுவிட்டுச் சாவதானமாக வந்து கதவைத் தட்டணும், இப்படியப்படி என்று பல நாளாக நான் கோடித்ததெல்லாம், ஒரு நிமிஷத்தில், பொத்துவிட்ட பலூன் மாதிரி ஆகிவிட்டது. ......இனிமேல் இதுபோல் வேடிக்கை செய்யச் சந்தர்ப்பமே கிடைக்கப் போவதில்லை!......... என் ஆசை வீணாகிவிட்டது! மாமா. 'வாருங்கள் மாப்பிள்ளை!' என்றதும், எனக்குத் தலை கிறுகிறுப்பு ஏற்பட்டதுண்டேல்லியோ...... சொல்லவே முடியாது! இப்போதுகூட எனக்கு, மாமா அழைத்ததை நினைத்தால், படபடக்கிறது உடம்பு!' என்று அவர் ஆவேசம் வந்தவர்போலப் பேசிக்கொண்டே போனார் . . .

அவர் அவ்வளவு தூரம் வருத்தப்பட்டதைப் பார்த்தபோது எனக்குக்கூட பரிதாபமாயிருந்தது சித்தி! 'ஏன் அப்பாவை ஸ்டேஷனுக்குப் போகச் சொன்னோம்! அவர் ஆசை பூர்த்தியாவதைத் தடுத்துவிட்டோமே! பாவம்! ரயிலைவிட்டு இறங்கும் சமயத்தில் தம் திட்டம் நிறைவேற இன்னும் கொஞ்ச நேரம்தான் என்று அவர் மனது துள்ளும் அந்த அரிய சமயத்தில், அப்பா போனதனால், எத்தகைய ஏமாற்றம் ஏற்பட்டிருக்கும்!.......... பொத்துவிட்ட பலூன் என்று ஏன் சொல்லமாட்டார்!.......... நான் முந்திக் கொள்ளணும் அவரை, என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டதெனக்கு!' என்று என்னை நானே நொந்துகொண்டேன்.

அந்தச் சம்பவத்திற்கப்புறம் எனக்கும் ஆசை சித்தி! அவர் செய்ததுபோல் நாமும் செய்யணும்! அவர் கண்டுபிடிக்கிறாரா பார்க்கணும்! ஏன் சித்தி! இப்படி போட்டி போட்டு வேடிக்கை செய்தால் நன்றாயிராதா. சித்தி!' என்றேன். எப்படியோ சித்திக்கு என் மனதைத் திறந்து கூறிவிட்டேன்!

"ஓ! பேஷாகச் செய்யலாம் பார்! ஒரு நாடகமே நடத்திவிடலாம்" என்றாள் சித்தி உத்ஸாகமாக.

சித்தியின் யோசனை எப்படிப் போகிறதென்பதை நான் ஒருவாறு ஊகித்தறிந்து கொண்டேன், உள்ளம் பூரித்தேன். நான் போட்ட திட்டத்திற்கு மேலே, பிரமாதமான திட்டமாகப் போடுகிறாள்! சரி; போடட்டும். நல்ல உயர்ந்த தமாஷாய் இருக்கட்டும் என்று எட்டிப் பார்த்த கூச்சத்தைக் களைத்தெறிந்து, சித்தியின் யோசனைகளை ஆமோதிக்கலானேன்.

சித்தி அவ்வாறெல்லாம் என்னுடன் என் எண்ணங்களுடனும், யோசனைகளுடனும் ஒத்துழைக்க முன் வந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது என் அதிர்ஷ்டத்தைக் குறிப்பிட வேண்டும். ஆதிமுதல் ஒரு தடையின்றி அப்பா, அம்மா, அத்தை முதலானவர்களின் சம்மதத்துடன் இவ்வளவு தூரம் பலித்துவிட்ட என் யோசனைகள், முழுக்க நிறைவேறவிருந்தபொழுது எப்படித் தடை ஏற்படக்கூடும்? மேலும் சித்தியும் என்னைப் போலவே குறும்புக்காரி. இது போன்ற வேடிக்கைகள் செய்வதில் பிரியமுடையவள். என்னைவிட ஐந்தாறு வருடங்களே பெரியவள். என் கணவருடைய சரளமான சுபாவத்தையும் அறிந்தவள். தமாஷ் செய்தால், அவரும் சேர்ந்து சிரித்து மகிழ்வார் என்ற தைரியம் அவளுக்கும் உண்டு. எல்லாம் ஒருங்கு சேர்ந்து, ஒழுங்காய் யோசனைகள் பலிக்க உதவிபுரிந்தன!

நான் சென்னை வந்து ஒருவாரமாகியும், அவர் சித்தியகத்திற்கு வரக்காணோம். 'இன்று வருவார்,' 'இன்று வருவார்', என்று அந்த ஏழு நாட்களும், மாலைவேளைகளில் வீட்டைவிட்டு நகராமல் இருந்தேன். அவர் வராதது கண்டு மனம் சிறிது கவன்றாலும், என் கணவரைச் சீக்கிரம் காண்பேன் என்ற எண்ணம் தீவிரமாக ஆட்சி செலுத்தி, மனதைக் கலங்காமல் நிறுத்தியது. வெகு சமீபத்திலேயே இருவரும் இருக்கிறோம் என்ற எண்ணமும் ஒரு உத்ஸாசம் ஊட்டி வந்தது. நட்சத்திர ஒளியின் உதவியால், மனந்தளராமல், இருளின் அடர்த்தியைப் பொருட்படுத்தாமல் வழி நடக்கும் பிரயாணியின் மனநிலையை ஒத்திருந்தது என் மனநிலையும். அந்த ஏழு நாட்களும் மாலை கழிந்து இரவு படர்ந்ததும் என் மனதிலும் இருள் கவியும். ஆனால் நம்பிக்கை என்னும் தீபத்தை ஏற்றி வைத்ததும், இருள் ஒருவாறு அகலும்.

அன்று மாலை வாசலில் பூக்காரனிடம் பூ வாங்கிக்கொண்டிருந்தேன். கொஞ்சம் தொலைவிலே சைக்கிள் மணியோசை கேட்கவே, சடாரெனத் தலை நிமிர்ந்து பார்த்தேன்.

ஊஹும்! . . . அப்போதும் ஏமாற்றம்! உடனே ஏதோ உள்ளுணர்ச்சியினால் தூண்டப்பட்டு, என் கண்கள் அடுத்தபடியாக அந்தத் தெரு முழுவதையும் ஊடுருவிப் பார்த்தன.

ஆ! அது யார் தெரு முனையிலே நுழைகிறது! . . அவர்தான்! ஆம்! அவரேதான்! அதோ! அந்தக் கைவீச்சு! கிறாப்பு! கண்ணாடி! . . . அவரேதான்!

ஒரு நொடியில், கையில் பையுடன் வரும் அவரை ஊன்றிக் கவனித்துவிட்டது கண். அவர் இன்றும் என்னைப் பார்த்திருக்க முடியாது!..... கையில் பூச்சரத்துடன் சரேலெனச் சமையலறைப்பக்கம் ஓடிப் புகுந்து கொண்டேன்.

"அவர் வருகிறார் சித்தி! நான் கண்ணில்படவில்லை! நீயே பூக்காரனுக்குக் காசைக் கொடுத்துவிடு! அவர்பாட்டுக்குச் சிற்றப்பாவோடு மாடியில் போய்ப் பேசட்டும்! பேச்சுவாக்கிலே, சித்தப்பா ஒன்றும் சொல்லிவிடமாட்டாரே!" என்றேன் வியர்த்துக்கொட்ட. எனக்கு ஒரே படபடப்பு. தரையில் கால் பாவாததுபோல ஒரு உணர்ச்சி. முதன் முதலாக நாடக அரங்கம் ஏறும் நடிகைகூட அவ்வளவு படபடப்பு அடையமாட்டாள்!

"ஓ! மாப்பிள்ளையா? வாருங்கள்!" என்று வரவேற்புக் கூறிய சித்தியின் குரல் வாசலிலிருந்து கேட்டது.

"இதோ வந்தேன்? மாமாயிருக்காரோல்லியோ?"

ஆ! அவர் குரல்தான் அது!

"உம்! மாடியிலே இருக்கார்! நீங்கள் பட்டணத்துக்கு உத்தியோகமாய் வந்திருக்கிறீர்கள் என்று நேற்றுத்தான் கமலா கடித மூலம் தெரிந்தது! 'நாளாச்சு உங்களைப் பார்த்து,' என்று பேசிக்கொண்டிருந்தோம். நல்ல வேளை, ரொம்பநாள் காக்க வைக்காமல், இன்றே நீங்கள் வந்துவிட்டது ரொம் சந்தோஷம்!...... மாடிடியிலே இருக்கார் அவர்! அங்கேயே போய்க் காற்றாடப் பேசிக்கொண்டிருக்கிறீர்களா?" என்று கூறி, சித்தி, நாடகத்தைத் துவக்கிவிட்டதையும் கவனித்தேன்!

சித்தி, அவரை மாடிக்கு அனுப்பிவிட்டு, என் பக்கம் வந்து நின்றாள். மணப்பெண்ணுக்கு இன்பம் அளிக்கும் வகையிலே தைரியமூட்டும் சகியைப்போல. ஒரு குறும்புத்தனத்துடன், "பார், எல்லாம் ஜோராக நடக்கும்!" என்றாள். நான் சமையலறையை விட்டு வெளிவந்தேன். மாடியிலே அவர்கள் பேசுவதை உன்னிப்பாகக் கேட்கலானேன். சித்தியின் யோசனைப்படி சகலமும் நடக்க இன்னும் ஒரே ஒரு தடையிருந்தது. ஒரு அகன்ற நீரோட்டத்தின் வேகத்தை, நீர் மட்டத்தின் மேல் இருக்கும் ஒரு சிறுகோல் தடை செய்கிறது, அந்த கோலை அகற்றினால், மளமளவென்று போகிறது தண்ணீர்........ ஆம். அதுபோலத்தான் எங்கள் திட்டங்கள் தங்கு தடையின்றி நடக்க ஒரு சிறு தடையிருந்தது அப்போது.

"மாப்பிள்ளை! இன்றிரவு இங்கேயேதான் சாப்பிடணும், தூங்கணும். நாளைக்கு ரகுவுக்கு ஆயுஷ்ஹோமம். நாளைக்கும் சாப்பிட்டுவிட்டு, ஆபீஸ் போகலாம்! தடை சொல்லக்கூடாது! தெரிந்ததா?......... இதற்கு முன் நான்கைந்து தடவை வந்தும், நீங்கள் ஒரு வேளை கூட சாப்பிடவில்லை. அதற்கு ஈடாக இன்று தங்கிவிட்டு, காலையிலும் விருந்து சாப்பிட்டுவிட்டுத்தான் போகணும்!" என்று கொஞ்ச நேரத்திற்கெல்லாம் சிற்றப்பா தொடர்ந்தார், நாடகத்தைத். துவக்கினார் தம் பாகத்தை!

ஆ! அதோ! "சரி மாமா!" என்று கூறிவிட்டார். 'அவர்'! பிடியிலிருந்து விடுபட்ட புறாப்போல பறந்துசென்றேன் சித்தியிடம்.

"அவர் ஒப்புக்கொண்டுவிட்டார் சித்தி!" என்றேன், என் நெஞ்சில் கையை வைத்த வண்ணம்! சித்தியின் கண்களில் புலனான எக்களிப்பு எனக்குக் கூச்சம் தோன்றக் காரணமாயிற்று. என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டுவர, அப்பால் நகர்ந்தேன்; சிறிது பொறுத்துத் திரும்பிவந்தேன்.

"சித்தி! அவருக்கு மைசூர் ரசமும், டொமொடோ வெங்காய கொச்சும் ரொம்பபிடிக்கும்! பண்ணலாமா? நான் பண்ணட்டுமா?" என்று கூறியவாறே, சித்தியின் பதிலுக்குக் காத்திராமல் அவற்றைத் தயார் செய்யலானேன். சித்தி தடை கூறாள் என்பது எனக்குத் தெரியாதா?

நான் அந்த இரண்டு உண்டிகளையும் பக்குவம் செய்யும்விதம்தான் அவருக்கு ரொம்ப பிடிக்கும். 'அந்த இரண்டு உணவுகளினாலும் என் நினைவு வரட்டும். என்னைப் பற்றி

யோசனைகளும் உணர்ச்சிகளும் பெருகட்டும் அவர் உள்ளத்திலே,' என்றே அவ்வாறு செய்தேன்.

சாப்பாட்டின்பொழுது சித்தி எல்லோருக்கும் பரிமாறினாள். நான் உவகையுடன், சமையலறையிலிருந்தவாறே அவருடைய குரலினிமையைப் பருகிக் கொண்டிருந்தேன். இன்பத் தேனென்னப் பாய்ந்து வந்த அவருடைய பல மொழிகளுக்குப் பின், அந்தத் தேனினும் உயர்ந்த அமிழ்தும் என் செவிகளில் பாய்ந்தது.

"இந்த ரசமும் பச்சடியும் கமலி செய்வது போல வேறு யாரும் செய்து நான் இதுவரை பார்த்ததில்லை! மாமி இன்று அப்படியே செய்திருக்கிறார்!" என்றார் அவர்.

அப்படி அவர் கூறி முடித்ததுதான் தாமதம், சித்தியின் குறும்புப் பார்வை என் பக்கம் திரும்பியது. அடுத்தாற்போலச் சாப்பிட அமர்ந்திருந்தவர் பக்கம் சென்றது, சித்தப்பாவைப் பார்த்துத்தான் போலும். ஒரு பொருள் செறிந்த பார்வை பார்த்தாள்!

என்னைப் பற்றி அவர் வாயிலிருந்து வந்த புகழ்மொழிகள் என் பொறுமையைச் சோதித்தன! அவரைக் காண, கண்களாரக் காணத் துடித்தேன். அந்த நாளிலே இலங்கைச் சிறையில் அடைந்து கிடந்த சீதை, ராமனைப் பார்க்க எப்படித்தான் துடித்திருப்பாளோ?......... நல்ல வேளை, சீதைக்கிருந்த பொறுமையில் ஒரு மயிரிழை எனக்கும் இருந்தது.

'சே, என்ன வெட்கக்கேடு! எவ்வளவோ சலுகையோடு நாமும் சித்தியிடம் எல்லாம் சொல்ல, சித்தியும் சிரத்தையுடனும் நம் ஏற்பாட்டுக்கு மேல் பெரிய ஏற்பாடு செய்திருக்க, கலைப்பதா நாம்? 'ஆக்கப் பொறுத்து ஆறப் பொறுக்கவில்லையே!' என்று சித்தப்பா சிரித்தால்?...... ஆவலை அடக்கினேன். மேலும் அது எழாமல் நல்ல வேளை, சாப்பாடு முடிந்து அவர்களும் மாடிக்குப் போய்விட்டார்கள்.

கீழே நானும் சித்தியும் காரியங்களை முடித்துக்கொண்டோம்.

"உம், சீக்கிரம்! டாய்லெட் செய்து கொள்!" என்றாள் சித்தி! அசாத்தியக் குறும்புக்காரியாச்சே அவள்!

"போ, சித்தி! நீயே இப்படிக் கேலி பண்ணினால்!" என்றேன். சூழ்ந்துகொண்டிருந்த கூச்சத்துடன், அவ்விடம் விட்டுப் பெயர்ந்தேன்.

"படுக்கப் போகலாமா?" என்று மாடியிலே சிற்றப்பா அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தது காதிலே விழுந்தது. சிறிது பொறுத்து!

"அறைக்குள்ளே புழுங்குமோ என்னவோ! மாடி வராந்தா நன்றாயிருக்கே! காற்றோட்டமாய் இங்கே படுக்கக்கூடாதா?" அவர் கேள்வி!

"வேண்டாம் மாப்பிள்ளை! இந்த அறை தான் சுகம்! இன்று தூங்கிப் பாருங்கள், பேஷாக இருக்கும்! நானும் இங்கேயே, உங்கள் பக்கத்தில் படுத்துக்கொள்கிறேன், அதுதான் இங்கேயே போடச் சொன்னேன் இரண்டு பேருக்கும்! என் இடம் எப்போதும் இங்கேதான்!"

சிற்றப்பா பேசி முடிக்கும் சமயம், கீழேயே நின்று கொண்டிருந்த ராஜு, நாடகத்தில் தனக்குக் கொடுக்கப்பட்ட குட்டிப் பார்ட்டை நடிக்க, மாடிக்குப் புறப்பட்டான்.

"அப்பா, யாரோ உன்னோடு பேசணுமாம், வந்திருக்கார்!" என்றான் அவன்.

"ஓகோகோ, சரிதான்! அந்த அரட்டைக் கல்லிப் பிராமணன், வருவதாகச் சொல்லியிருந்தான், வந்துட்டானாக்கும்! பேச ஆரம்பித்தால், உடும்பு மாதிரி விடமாட்டானே! ......மாப்பிள்ளை! நீங்கள் படுத்துத் தூங்குங்கள், நாழியாச்சு! எனக்காகக் காத்திருக்க வேண்டாம்! என்ன! படுங்கள், கவலையற்று ஒரு நாளாவது!" என்று பிள்ளையிடமும், மாப்பிள்ளையிடமுமாகப் பேசிவிட்டுக் கீழே இறங்கி வரலானார் சிற்றப்பா!

சிற்றப்பாவைப் பார்க்கவே கூச்சமாயிருந்ததால், அவர் கண்ணில்படாமல், கூடத்து மூலையில் ஒதுங்கினேன்.

சிற்றப்பா, உட்கார்ந்திருந்த சித்தியிடம் குனிந்து, "மங்களம்! அவள் எங்கே? கண்ணிலேயேபடவில்லை! . . . எங்கே வரச்சொல், முகத்தைப் பார்க்கலாம்!" என்று கேட்டார், கேலியாக.

நான் எட்டிப் பார்க்கவேயில்லை . . .என்ன இருந்தாலும் சித்தி, சித்திதான், என்னைப்போலப் பெண்! அவளிடம் சகஜமாயிருப்பதுபோல, 'காதல்', விஷயத்தில் அகப்பட்ட நான், சிற்றப்பாவிடமும் இருக்க எப்படி இயலும்?

சித்தி மகா யோசனைக்காரி; "உஸ்! வாசலுக்குக் கொஞ்சம் போங்கள்!" என்று சிற்றப்பாவுக்கு உத்தரவிட்டுவிட்டு, என்னிடம் வந்தாள். மெல்ல, "இதோ பார், கமலம்! நாங்களெல்லாம் கொட்டாப்புளி மாதிரி முழிச்சுண்டிருந்தால், மாடிக்குப் படுக்கப் போகமாட்டாய் நீ! . . . இதோ எனக்கும் அலுப்பாயிருக்கு! தூக்கம் கண்ணைச் சுழற்றது! நான் போய் தூங்கறேன்!...... நீ சமயம் பார்த்து மாடிக்குப் போய்க்கொள்! சிற்றப்பா வாசல் உள் வராந்தாவிலே படுத்துண்டாச்சு! நீ மாடிக்குப் போய்ப்படுத்துக்கோ!........அடேயப்பா! சங்கோசத்தைப் பாரேன் இப்போ! அதெல்லாம் கூடாது! இத்தனை நாழி தைரியமாயிருந்த மாதிரியே யிரு! உம், என்ன! நான் போகிறேன்!" என்று கூறிவிட்டு, எனக்குத் தர்ம சங்கடமான நிலைமை ஏற்படாமல், அவ்விடம் விட்டு நகர்ந்தாள், இங்கிதம் அறிந்த என் சித்தி.

நாடகத்தைத் தொடர்ந்து, முடிப்பது என் ஒருத்தியின் பொறுப்பாகியது. ஒரு சில நிமிஷங்களுக்குப்பின், மெதுவாக, மாடிப்படிகள் பக்கம் நகர்ந்து கொண்டிருந்தேன். என் கணவர் துயிலிலாழ்ந்திருப்பார் என்ற தைரியம் எனக்கு. சாதாரணமாக அவர் எப்போதும் படுத்த சிறிது நேரத்திற்குள் உறக்கத்திலாழ்ந்துவிடுவார். தூக்கம் வராமல் படுக்கையில் புரளும் வழக்கம் கிடையாது! அதனை நான் அறியேனோ!

'டாண்!' . . . .மணி பத்தரை அடித்தது. மாடிப்படி ஏறிக்கொண்டிருந்தேன் . . .

'டாண்! டாண்!! டாண்!!!' . . . கடியாரமணி பதினோரு முறை அடித்தது.

அவர் பக்கத்திலே விரித்திருந்த மற்றொரு படுக்கையிலேயே, சுமார் கால் மணிநேரமாகப் படுத்து, விழித்திருந்த வண்ணம், துயிலில் ஆழ்ந்திருக்கும் அவருடைய முகத்தின் ஒரு புறத்தையே பார்த்தவாறு, அவர் முகத்தில் பன்மடங்காகத் தோன்றியிருந்த களையைப் பருகியவாறு, மெய் மறந்திருந்த நான், கடியார மணியொலியினால், என் நினைவு பெற்றேன்.

'ஓ! பதினோரு மணியாகிவிட்டதா? . . . .அவர் இன்னும் விழித்துக்கொள்ளவில்லையே! கடியார மணி பதினோரு முறை சப்தம் செய்தும் அவர் துயில் கலையவில்லையே?

கண் வளர்ந்திருந்த அவரை எழுப்பக் கை வரவில்லை. உடனே, பெண்மைக்கே உரிய சமயோசித புத்திதான் தோன்றியது போலும் எனக்கு. ஏதோ குருட்டு நம்பிக்கையுடன், கை வளையல்களைச் குலுங்கச் செய்தேன்.

வளையல்களின் மெல்லிய ஓசை கலைத்தது உறக்கத்தை! கடிகார மணியின் கம்பீரமான ஒலியால் எழாத அவர், வளையல்கள் செய்த மெல்லிய நாதத்தை உணர்ந்து, அசைந்தார் படுக்கையில்! என்ன மாயமோ அது!

நான் கண்களை லேசாக மூடியவாறு, அசையாமல் கிடந்தேன். நான் லேசாகக் கண்ணிமைகளை மூடியிருந்ததால், அவர் என்ன செய்கிறார் என்பதைக் கவனிக்க முடிந்தது. கண்ணிமைகள் துடித்தாலும், இருட்டில் அவர் அதைக் கவனிக்க முடியாது என்ற துணிவு எனக்கு. அந்த இருளே எனக்கு 'பெரிஸ்கோப்' என்னும் கருவியாக அமைந்தது. இயற்கையான இருள், என் அருமைக் கணவரின் செயல்களைக்காண உதவி புரிந்தது! செயற்கைப் பொருளாகிய 'பெரிஸ்கோப்' சத்துருக்களின் செய்கைகளைப் பார்க்க உதவும்; இந்த இரட்டிப்பு வேற்றுமைகயைக் கொண்டு ஒற்றுமை காட்டுவதெப்போ?

முதலில் அவர் படுக்கையிலிருந்தவாறே ஒருக்களித்துப் படுத்தார், நான் படுத்திருந்த பக்கம்.

பக்கத்தில் படுத்திருப்பது சிற்றப்பா அல்ல என்று அவருக்கு உடனே தெரிந்திருக்கும். வெண்மையான, விரிப்பு விரித்த படுக்கை மீது, கறுத்த சிகப்புப் புடவை உடுத்திய பெண் உருவம் படுத்திருப்பதற்கும், வெள்ளை வேஷ்டியுடுத்து ஆண் உருவம் படுத்திருப்பதற்கும் வித்தியாசம் தெரியாதா என்ன! பெண் உருவம் என்றும் தெரிந்திருக்கும், அந்தப் பெண் தன் கமலி என்று கூடத் தெரிந்திருக்கும்.

என்ன தோன்றிற்றோ . . . . .திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்துகொண்டார். உற்று ஒரு வினாடி கவனித்தார்.

அம்மம்மா! அந்த ஒரு வினாடிக்குள் நான் பட்டபாடு! . . . . .கொஞ்சம் நஞ்சம் இல்லை! என் உடல் எங்கே அசங்குமோ படபடப்பினால் என்று திகில். இனிமேல் அசங்கினாலும் பரவாயில்லை, விழித்துப் பேச்சுக் கொடுத்தாலும் பாதகமில்லை, நாடகம் நீடிப்பது அனாவசியம் என்று தோன்றினாலும், ஏனோ என் மனம் அவரை இன்னும் கொஞ்சம் சோதனை செய்ய அவாக் கொண்டது; படுத்தபடியே இருந்தேன்.

நான் அந்த ஒரு வினாடிக்குள் தத்தளித்ததற்குப் பன்மடங்கு அவர் மனம் கொந்தளித்திருக்க வேண்டும் சிலைபோலச் சமைந்துபோய், அமர்ந்திருந்த இடத்திலிருந்தவாறே கவனித்தார் என்னை. சந்தோஷம், ஆச்சரியம், சம்சயம், நம்பிக்கை என்ற பலவித உணர்ச்சிகளும் ஒருமிக்க அவரை ஆட்கொண்டனபோலும்.

திடீரென்று உட்கார்ந்திருந்தவர், எழுந்தார்.

'கமலிதான் என்ற நம்பிக்கை அவருக்கு எப்படி வரும்! . .. .ஆம், வராது! அதுதான் . . . .'

அவருடைய நேர்மையான குணமும், தூய்மையான மனதும், முன்னமே எனக்குத் தெரிந்தவைதான். ஆனால் இன்று என் கண்களால் பார்த்ததும் அவர்பால் சொல்லொணா அனுதாபமும், அன்பும் பீறிட்டன.

என் கையை நீட்டி அவர் கரத்தைப் பற்றி, "நான்தான்! உட்காருங்கள்!" என்றேன்; தொப்பென்று அவரும் பக்கத்தில் அமர்ந்தார்.

"கமலி! நீதானே! . . . .இதென்ன, இங்கெப்படி வந்தாய்?" என்றார்.

"உங்களைப் பார்க்கணுமென்ற ஆசைதான் கொணர்ந்தது என்னை!"

"போகிறது, நல்ல காரியம்! ஆனால் எப்படி வந்தாய், என்ன சமாசாரம், சொல்லேன்!"

சொன்னேன் அவரிடம். என் ஆசைகளையும், யோசனையையும், சித்தி சித்தப்பா அவர்களின் ஒத்துழைப்பைப் பற்றியும் விவரித்தேன். பிறகு,

"இப்போது நம்பிக்கைத்தானே, நான் கமலிதானென்று!"

"உம். உம் - இதென்ன கேள்வி? . . . நல்ல தமாஷ்! நான் புருஷன் நினைத்தது நடக்காவிட்டாலும், நீ பெண், எடுத்த காரியத்தைச் சாதித்துவிட்டாய்! கெட்டிக்காரி!"

அவரே கூறிவிட்டார், நான் சொல்ல நினைத்ததை. ஆனால் அவர் கூறினதுடன் நான் திருப்தியடையாமல், வாதாடாமல் இருக்க முடியாமல், இன்னொரு கேள்வியைக்கேட்டு, அவர் வாயைக் கிளறப் பார்த்தேன்.

"அப்போது சொன்னீர்களே, 'ஒன்றுபட்ட மனதின் அழைப்பு எனக்கு உங்கள் வரவைத் தெரிவித்தது,' என்று! இப்போது உங்களுக்கு என்னைப் பார்ப்போம் என்ற நம்பிக்கையாவது, எண்ணமாவது இருந்ததா? உங்களைப் பற்றியே அப்போதெல்லாம் சர்வதா யோசனை பண்ணி வந்த எனக்கு, உங்கள் இதய அழைப்புக் கேட்டது! ஆனால் என்னைப் பற்றி உங்களுக்கு யோசனைகளோ ஏதோ ஒன்றும் இருக்கவில்லை. என் இதய அழைப்பு உங்களுக்குக் கேட்கவேயில்லை! என்னைப் பற்றிய நினைவு உங்களுக்கு அதிகம் கிடையாது என்று எனக்குத் தெரிந்து போச்சு! . . . .கடுதாசிதான் பிரமாதம்!" என்றேன்.

"பார், பார்! கோபம் வந்துவிட்டதே! நீ மாத்திரம் கடிதத்திலே பிரமாதமா 'இனிமேல் சண்டையே பிடிக்கமாட்டேன்!" எழுதுவையே! இது மட்டும் என்ன நியாயமோ!" என்றார் சிரித்துக்கொண்டே.

நானும் பதிலுக்கு, "ஐயோ, இல்லை! . . . உங்கள் உடம்பைப் பார்த்தாலே தெரியல்லையா எனக்கு, எனக்காக வீங்கிப் போனேளா இல்லையா என்று!" எனப் பகர்ந்தேன். புதிதாக உத்தியோகம் பார்க்கும் உத்ஸாகமோ, என்னமோ, அவர் உடம்பு கொஞ்சம் தேறித்தான் இருந்தது!

எங்கள் தர்க்கம் ஓய்ந்தது.

மறுநாள் காலைமுதல் சாப்பாட்டு நேரம் வரை என் கணவரை என் சித்திப் பிள்ளைகள் 'கோட்டா' பண்ணிக்கொண்டேயிருந்தார்கள். சித்தி, சிற்றப்பா கூட முதலில், "ஏன் மாப்பிள்ளை, கடைசி வரையில் கண்டுபிடிக்கவேயில்லையே!" என்றார்கள். அப்புறம் குழந்தைகளைக் கண்டிக்கும் சாக்கிலே, 'அடே, ஏனப்படி அவரைத் துளைக்கிறீர்கள்? ஆமாம், தெரியல்லை என்று ஒப்புக்கொள்கிற மாதிரிதான் அவர். சிரித்து மழுப்புகிறாரே!" என்று பரிகாசம் செய்தார்கள்.

எல்லோருடைய பேச்சுக்கும், கோட்டாவுக்கும் அவர் அளித்த பதில் புன்சிரிப்புத்தான். நானும் மூன்று நான்கு தடவை, "அவருக்கு எப்படித் தோன்றும்? என்னைப் பற்றிய யோசனையோ நினைவோ இருந்தால்தானே?" என்று சொல்லிக் காட்டினேன். அதற்கும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. அன்று காலைச் சாப்பாடு, விருந்துச் சாப்பாடுதான். ஆனால் குழந்தையின் ஆண்டு நிறைவுக்காக அல்ல! மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும்!

உணவருந்தும்போது, மறுபடியும் ஏதோ பேச்சு வரவே, நான், "சித்தி, அவருக்கு என்னைப் பார்ப்போம் என்ற எண்ணமே இருக்கவில்லை! . . . அதனாலேயே தெரியவில்லையா எத்தனை......" என்று ஆரம்பித்தேன்.

அப்போதுதான், யாரும் எதிர்பாராத ஒரு வெடிகுண்டைப் போட்டார் அவர். "ஓகோ! அப்படியா சமாசாரம்! நீ இங்கிருப்பது தெரியாதா எனக்கு? பேஷா...... த் தெரியும்!" என்றார்.

"உம்! சொல்வேள் இப்போது! தெரியாது என்று நீங்களே சொன்னீர்களே! இப்போது எல்லோரெதிரிலும் ஒப்புக்கொள்ள வெட்கமோ!" என்று வாதித்தேன்.

"உனக்காகச் சொன்னேனாக்கும் தெரியவே தெரியாது என்று! எனக்குத் தெரியுமென்றால், எனக்கு முன்பு ஏமாற்றம் ஏற்பட்ட மாதிரி உனக்கும் ஏற்பட்டுவிடுமே, உங்கள் எல்லோருடைய சந்தோஷமும் 'பொக்'கென்று போய்விடுமே என்றுதான் நானும் அமுக்கமாய் இருந்தேன். தெரியுமா? ஆனால். நீ வாய்க்குவாய் சுட்டிக்காட்டினால், நான் மட்டும் ஏன் மறைக்கணும்? . . . வேணுமானால், சந்தேகமாயிருந்தால், மாடியிலே என் ஷர்ட்டுக்கிட்ட ஒரு பை மாட்டியிருக்கேன், கொண்டுவா, சொல்கிறேன்!" என்றார்.

"இதேது?" என்று எண்ணியவாறு ஓட்டமாய் ஓடிப்போய், பையை எடுத்து வந்தேன்!

"அதிலிருக்கிற அட்டைப் பெட்டியைத் திறந்து பாரு; உள்ளேயிருக்கிற 'ஹாண்டுபாக்' உனக்குத்தான் கொணர்ந்தேன்! பூனாவில் வாங்கினது. ஜாகையில் வைத்திருந்தேன். நீ இங்கிருக்கிறாய், கையிலேயே கொடுத்துவிடலாம் என்று கொணர்ந்தேன்!'

ஆம்! உண்மையாகவே ஒரு அழகிய 'ஹாண்டு பாக்' பெட்டியினுள் காட்சியளித்தது! நான் திகைத்து நின்றேன்!

"ஆமாம்! உங்களுக்கு எப்படித் தெரிந்தது? அதைச் சொல்லுங்கள்!" என்று கேட்டுவிட்டாள் சித்தி. நானும் அதையே கேட்க எண்ணினேன்.

"மாமா ஸெண்ட்ரலிலிருந்து கமலியை அழைத்து வருவதைப் பார்த்தேன், தற்செயலாக. அவள் பார்க்கவில்லை என்னை. 'கமலியா! கடிதம் போடாமல் வந்திருக்கிறாளே!' என்று திடுக்குற்றேன் முதலில். பிறகு, 'இருக்கட்டும்! காரணமில்லாமல் அவள் ஒன்றும் செய்யமாட்டாள்! மேலே என்ன நடக்கிறது பார்க்கலாம்!' என்ற நிச்சயம் செய்துகொண்டேன்.

'இங்கேதான் இருப்பாள், நாம் தெரியாததுபோலச் சாதாரணமாகப் போகலாம் என்று நினைத்தேன், உடனே, 'ஹாண்டு பாக்கை'யும் எடுத்துப் போகலாமே!' என்று அதையும் எடுத்து வந்தேன்."

"இங்கே வந்து, மாடியேறிப்போன பிறகு கூட, கமலி கண்ணில் படாதது கண்டு ஆச்சர்யமாயிருந்தது. 'எங்கேயாவது வெளியிலே போய் இருப்பாள்!' என்று தோன்றினாலும், சந்தேகமும் பிறந்தது. மாமி, நான் வாசற்படி ஏறினதும், 'கமலி கடிதம் போட்டாள் நேற்று' என்று ஏன் சொன்னார்? என்று சந்தேகம் வந்துவிட்டது. சாப்பிடும்போது கூட, அவளைப் பற்றி நீங்கள் அதிகம் பேசாமல், அவளை அழைத்து வந்ததையே சொல்லாமல் இருந்ததைப் பார்த்து, 'சரி, என்ன நடக்கிறது பார்ப்போம்!' என்று கடைசி வரையில் பூனைபோல இருந்தேன்! அப்புறம் இராத்திரியும் கமலியிடம் எனக்குத் தெரிந்திருந்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. அவளுக்கு ஏமாற்றமாகிவிடுமே என்று! . . . என்ன கமலி! இப்போது என்ன சொல்லகிறாய்? ஏன் மாமா, எங்களிருவரில், யார் கெட்டிக்காரர்! சொல்லுங்கள்!" என்று கூறிவிட்டு, ஒரு வெற்றிப் பார்வை பார்த்தார் என் கணவர். வாயடைத்து நின்ற எங்களிடையே நிலவிய நிசப்தத்தைச் சிற்றப்பா கலைத்தார்.

"அப்பப்பா, ஒருத்தருக்கொருத்தர் சளைத்தவரில்லை! நல்ல வேடிக்கை, நல்ல கூத்து! நல்ல பிள்ளை, நல்ல பெண்!" என்றார் உரக்க.

பிறகு சித்தி பக்கம் திரும்பி, "ஏன் மங்களம்! நாம் எப்போதாவது இதுபோல வேடிக்கை செய்ய முயன்றிருக்கிறோமா? நம்ம பெரியவர்கள் தான் சும்மா இருப்பார்களா? நாமும் இவர்களுடன் ஒத்துழைத்ததால்தானே இவ்வளவு தூரம் வேடிக்கை நடந்தது? பார், பார்! அவர்கள் நம்மை மறந்தே போய்விட்டார்கள். மெய் மறந்துவிட்டார்கள் சந்தோஷத்தில்!"

"ஐயோ, ராமா! இல்லவேயில்லை" என்று சட்டெனக் கண்களை அவரிடமிருந்து அகற்றினேன்; அவர்கள் கேலிக்கு என்ன குறைச்சல்!

உண்மையில் எனக்குச் சந்தோஷமாயிருந்தது. என் கணவர் தாமும் 'குட்டாக' இருந்துகொண்டு, எங்கள் திட்டங்களை நிறைவேற்ற அவகாசம் தந்து, அப்புறம் குட்டை உடைத்துப் போட்டு, தமாஷுக்குச் சிகரம் வைத்தாரே என்று!

அன்று அவர் ஆபீஸ் போய்விட்டு, திரும்பவும் மாம்பலத்திற்கே சிற்றப்பா அகத்திற்கே வந்தார். அன்று முழுதும் கூட ஒரே சிரிப்பும் கும்மாளமும் தான் வீட்டிலே! பள்ளி மாணவர்கள் கூட அவ்வளவு கூத்தடிக்க மாட்டார்கள்!

அப்புறம் ஒரு மாதத்திற்குள் பல சம்பவங்கள், இன்றொன்றும், நாளைக்கொன்றுமாக நிகழ்ந்து, கடைசியில், எங்களைச் சென்னையின் மற்றொரு பகுதியில், இந்த வீட்டில், கொணர்ந்து அமர்த்தியது தெய்வம்.

நாங்கள் இங்கே குடிவந்த சில நாட்களுக்கு அப்புறம், ஒரு நாள் நான் என் கணவரின் பரிசளிப்பான 'ஹாண்டு பாகை' ஆர அமர எடுத்துப் பார்க்க ஆவல் கொண்டு, பெட்டியிலிருந்து எடுத்தேன். பையை எல்லாம் நன்றாகப் பார்த்தும் திருப்தியடையாமல், அட்டைப் பெட்டியையும் திருப்பித் திருப்பிப் பார்த்தேன். அப்படிப் பார்க்கையிலே, திடுக்கிடும்படியாக ஒரு விசேஷங் கண்டேன்.

பெட்டியின் உட்புறம், பையினுடைய விலையும், பக்கத்திலேயே அது விற்கப்பட்ட கடையின் பெயரும் காணப்பட்டன. சென்னையிலேயே வாங்கின பை அது! அதுவரை நான் அதைக் கவனித்ததில்லை! 'பூனாவில் வாங்கினதாகச் சொன்னாரே,' என்று யோசித்தேன்.

அன்று மாலை அவர் ஆபீசிலிருந்து வந்ததும், "கமலி! இதோ, சம்பளப் பணம்! எண்ணி எடுத்துவை! உன் ஹாண்டு பாகில். நாம் குடித்தனம் வைத்தபின், முதல் சம்பளம்!" என்றார்.

"ஹாண்டு பாக்" என்றதும் பேச்சு எடுத்தேன்.

"ஆகட்டும், வைக்கிறேன்! . . . .அதிருக்கட்டும்! பையைப் பூனாவில் வாங்கினது என்று சொன்னீர்களே, சென்னைக் கடையின் பெயரல்லவா அதிலே போட்டிருக்கு? 'பூனாவில் வாங்கினது என்றால்தான், பை ஒசத்தியாகத் தோன்றும்; உள்ளூரில் வாங்கினதென்றால் பெருமையிராது எனக்கு', என்றுதானே உங்கள் எண்ணம்?" என்றேன்.

"அடே, இதென்ன பெரிய பிரமாதம்! அது இங்கே வாங்கினதுதான்! உன் சித்தியகத்திற்கு வரும் வழியில் வாங்கினதுதான்! ஆனால்...... அன்று சித்தியகத்திலே சந்தர்ப்பத்தை யுத்தேசித்து நான் புளுகின புளுகுகளில், சென்னை பூனாவானது என்ன அதிசயம்!" என்றார்.

நான் துணுக்குற்று, "என்ன! புளுகுகளா?" என்றேன்!

"ஆமாம்! நான் அன்று சாப்பாட்டின்போது சொன்னதெல்லாம், உங்களையெல்லாம் மடக்கி, வேடிக்கையைக் கொஞ்சம் உயர்த்த ஜோடித்த புளுகுகள்தான் . . . "

"அன்றைக்குச் சித்தியகத்தில் காலை எழுந்ததுமுதல், சாப்பிடுவதற்குள் நான்கைந்து தடவை என்னைப் பரிகாசம் பண்ணிக்கொண்டேயிருந்தாயல்லவா? நான் கண்டுபிடிக்கவில்லை, கண்டுபிடிக்கவில்லை என்று சும்மா சொன்ன வண்ணம் இருந்தால் எனக்கு மட்டும் ரோசம் இராதா? எனக்கும் உங்களைத் தூக்கிவாரிப் போடச் செய்யணும், உங்கள் பெருமையை அடக்கணும் என்று ஆவேசம். ஏதாவது வழி கிடைக்காதா என்று யோசனை செய்தேன் தீவிரமாக. காலை முதல் இருந்து வந்த யோசனை, நான் குளித்துவிட்டு வரும் போதைக்கே, சரியான புளுகு மூட்டையைச் சேர்த்து வைத்துவிட்டது.

"நல்ல வேளை என் யோசனைகள் கச்சிதமாய் இருக்க, நான் சொல்வதை உண்மையென்றே நீங்கள் நம்ப, முதல்நாள் வரும் வழியில் தற்செயலாய் உனக்காக நான் வாங்கின 'ஹாண்டுபாக்', அடிப்படையான ஆதாரமாக இருந்தது; நேர்த்தியாய் அமைந்தது என் யோசனையும்."

"நான் வெந்நீர் அறையிலிருந்து வரும்போது நீ நான்காந் தடவையாகச் சொன்னபோதே. புளுகு மூட்டையை அவிழ்க்கலாமா என்ற ஆவேசம் எனக்கு. ஆனால் பொறுத்தேன். மறுபடியும் சாப்பாட்டின்போது நீ சொல்லவே, பொத்துக்கொண்டு வந்தேவிட்டது ரோசம். சரமாரியாய்ப் பொழிந்தேன் என் திறனையெல்லாம். நீ சொல்லியிருந்த சில சமாசாரங்களையே ஆதாரமாக வைத்துக்கொண்டு, சித்தி கேட்ட கேள்விக்கும், தங்குதடையின்றிப் பதில் சொல்லிச் சமாளித்தேன். சிற்றப்பா ஸ்டேஷனுக்கு வந்து உன்னை அழைத்து வந்தார் என்பது நீ சொல்லித்தான் தெரியும்! நானா பார்த்தேன்? . . . எல்லாவற்றையும் சேர்த்துச் சோடித்து ஒரு போடு போட்டேன், அசந்து போய்விட்டீர்கள்! உனக்குத்தான் இப்போது குட்டுத் தெரிந்துவிட்டது, ஆனால் உன் சித்தி, சிற்றப்பா இன்றும் நான் சொன்னது உண்மைதான் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்."

"அத்தனை பேருக்கு எதிரில், நீ சொல்வதற்கு மட்டுமல்லாமல், அவர்கள் ஒவ்வொருவருடைய பரிகாசத்திற்கும், சிரித்துக் கொண்டேதான் போகப் பார்த்தேன். ஆனால் கேலியும் உங்கள் பெருமையும் மீறவே, எனக்கும் ஒரு புறம் ஆவேசம், பதிலுக்கு ஏதேனும் செய்யணுமென்று! என் மதிப்புக் குறையவிடுவேனா? என்ன இருந்தாலும் ஆண் பிள்ளை, தோல்வியை ஒப்புக்கொள்ள மனசு வருமா, அதுவும் பெண்கள் முன்னே!"

நான் குறுக்கிட்டு, "நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், தோல்வி தோல்விதானே? கண்டுபிடிக்கவில்லையே உண்மையாக?" என்று பதில் கொடுத்தேன்!

"அதெப்படி தோல்வியாகும்! கடைசியில், தோல்வியென்னும் சமயத்தில், நிலைமையைச் சமாளித்து வெற்றிப் பார்வை பார்த்தது யார்? நீயா நானா?" என்றார் அவர், லேசான புன்னகையும், பெருமிதமும் முகத்தில் ஊசலாட.

"வெற்றிப் பார்வையொன்றும் இல்லை, அது! வெறிப் பார்வைதான்! கோபவெறியில். ஆவேசமாகப் பேசித் தீர்த்துவிட்டு, அப்படி விழித்தீர்களாக்கும்! உண்மையறியா நாங்கள், ஏமாந்துபோய், உங்களுக்கு வெற்றி என்று நினைத்தோம், வெறிதான் அது! வெற்றியில்லவேயில்லை!" என்று நானும் ஆவேசம் வந்தவள் போலப் பேசிக்கொண்டு

போனேன். என் மீதும், சித்தி சிற்றப்பா மீதும் அவருக்கு ஆத்திரம் வந்தது என்ற எண்ணம் தான் எனக்குப் பொறுக்கவில்லை.

ஆனால், அவர் தமக்கு இயல்பான ஒருமென்மையுடன், "இதோ பார் கமலி! ஏன் கோபம் வருகிறது உனக்கு? நிஜமாகவா, பொய்யாகவா கோபம்? பார்! அந்த நாளிலே நமக்கு இருவருக்கும் மனதிலே வெறிதானாக்கும்! போட்டி போட்டுக்கொண்டேயிருந்தோம்! வெற்றியும் இருவருக்கும் உண்டு! இப்போது பாரேன், நீ கோபித்தாலும், நான் தணிந்து போய்விட்டேன்! இப்போது உனக்குத் தான் வெற்றி! இல்லையா?" என்று கூறிவிட்டு, நகர்ந்து வந்தார் அருகு.

அன்பின் உருவான அவருடைய வார்த்தைகள் எத்தனை நாழி என் கோபத்தை நிலை நிறுத்தக் கூடும்? அவர் வார்த்தைகளுக்கும், செய்கைகளுக்கும், அந்தச் சக்தி மட்டும் கிடையாது எப்போதும்.

என்னையுமறியாமல், மனதினின்று வார்த்தைகள் வெளிவந்தன. "ஐயோ, உங்களுக்கா தோல்வி? இப்போதும் எனக்குத்தான் தோல்வி! அன்பினால் வென்றுவிடுபவர் நீங்கள்தான்! ஆனால் இதுபோலத் தோல்வியடைவதிலே எனக்குச் சந்தோஷமே!" என்றேன்.

அப்போது அவர் என்னைப் பார்த்த பார்வையில், அவருடைய கண்களின் மணிகளிடையே ஒரு தெய்வீக ஒளி கண்டேன், கண்டதும் என் பார்வை தழைந்து போயிற்று . . ..

"கிடக்கட்டும் கமலி! வெற்றியோ, வெறியோ, யாருக்கு வேணும்! எனக்கு நீ வேணும்! உனக்கு . . . நான்!" என்று முடித்தார் அவர்.

அதற்குமேல் நான் என்ன பேசமுடியும்?

இன்றைக்கும் என் மனதில் கேள்வி எழுகிறது: 'வெற்றியா. வெறியா? அவருக்கா எனக்கா, அந்த நாளிலே?' என்று.

உடனே தொடர்ந்து விடையும் கிடைக்கிறது: 'அவர் சொன்னதுபோல, இரண்டும்தான், இருவருக்கும்தான், அந்த நாளிலே!' என்று!

உண்மைதானன்றோ?

எனக்கு உண்டாகும் உள்ளக் களிப்பிலே. 'ஆகா! இதுபோல வேடிக்கையான சம்பவங்கள், வேறு எந்தத் தம்பதிகள் விஷயத்திலாவது நடந்ததுண்டா?' என்று தோன்றுகிறதே? . . . அது ஒருகால் உண்மையாயிராமற் போகலாம்!'

புக்கத்தகத்திற்கு வந்துள்ள இளம் மனையாள், என் சிநேகிதியாக விரைவில் ஆனால், அவள் என்னென்ன இன்பமயமான பழைய சம்பவங்களைப் பற்றிச் சொல்வாளோ?

**********

(காவேரி, டிசம்பர் 1947, ஜனவரி, 1948)